**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 89 of 2023

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : ராஜேந்திரன்

Father's Name : ஆறுமுகம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of January** 2026.

**(1 ம், 2 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது அப்பநாயக்கன்பாளையத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 30.11.2022 ம் தேதியன்று என் மச்சினனுக்கு சாமி கும்பிடுவதற்காக குடும்பத்துடன் கதிர்நாயக்கன்பாளையத்திற்கு சென்றுவிட்டோம். காலை 6 மணிக்கு சென்று விட்டுவிட்டு மாலை 6 மணியளவில் நான் மட்டும் கிளம்பி என் வீட்டிற்கு வந்தேன். எனது வீட்டின் கதவு பூட்டு நெம்பியிருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது எம் அறையில் உள்ள பீரோ உடைக்கப்பட்டிருந்தது. வெளியே வந்து என் மகனின் அறையை பார்த்தபோது அவருடைய பீரோவும் உடைக்கப்பட்டிருந்தது. எனவே நான் என் மனைவிக்கும் மகன்களுக்கும் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தேன்.

2. என் ஊரில் உள்ளவர்களிடம் தொலைபேசியின் மூலம் தகவல் கொடுத்தேன். பீரோவில்

வைக்கப்பட்டிருந்த செயின்கள், கம்மல், மூக்குத்தி என மொத்தமாக என்னுடையதும் என் மருமகளும் சேர்த்து 22 பவுன்கள் திருடுபோயிருந்தது. அதனால் மறுநாள் டிசம்பர் 1ம் தேதி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். மேலும் என் பீரோவில் இருந்த ரூ.1,60,000/- பணமும் திருடுபோயிருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் புகார் நான் அளித்தது ஆகும். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதாகும். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் ஒரு வாரம் 10 நாட்கள் கழித்து திருடுபோன பணம் மற்றும் நகைகள் கிடைத்துவிட்டதாக போலீசார் தகவல் கொடுத்ததன் பேரில் காவல் நிலையம் சென்று பொருட்களை அடையாளம் காண்பித்தேன். பின்னர் நீதிமன்றத்தில் மனு செய்து என்னுடைய பணம் மற்றும் நகைகளை திரும்ப பெற்று கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள 14 எண்ணிக்கையிலான பொருட்கள் மற்றும் புகைப்படத்தில் உள்ள பணத்தை தான் திரும்ப பெற்று கொண்டேன். புகைப்படத்தில் உள்ள 14 எண்ணிக்கையிலான பொருட்கள் **அ.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகைப்படத்தில் உள்ள பணம் **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பபட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.29 18:37:54 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**